Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.C.C.NO.108/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானலட்சுமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சினிவாசன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | புல்லானேரி | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 12 day of December 2022.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். 1ம் எதிரி திலகவதி என்னுடைய தம்பி மூர்த்தியின் மனைவி ஆவார். 2ம் எதிரி துளசியம்மாள் எனது அம்மா ஆவார். கடந்த 16.07.2017 அன்று மதியம் 12.00 மணியளவில் புல்லானேரியில் உள்ள எனது நிலத்தில் ஏறு ஓட்டுவதற்காக டிராக்டர் வந்ததால், எங்கள் நிலத்தில் இருந்த பைப்புகளை எடுத்து அருகில் வைத்தேன். அப்பொழுது 1ம் எதிரி திலகவதி, 2ம் எதிரி துளசியம்மாள் மற்றும் 1ம் எதிரியின் மகள் அகல்யா ஆகியோர்கள் என்னை தேவிடியா உங்க அப்பானஓலி என்று அசிங்கமாக திட்டினார்கள். பின்பு என்னை தள்ளிவிட்டு 2ம் எதிரி தன் கால்களால் என் கழுத்தில் மிதித்தார். பின்பு 1ம் எதிரி திலகவதி மற்றும் அகல்யா என்னை கழை கொத்தியில் வலது கை தோள்பட்டை எலும்பில் தாக்கினார்கள். நான் உடனே என்னை யாரேனும் காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். உடனே என் சத்தம் கேட்டு பட்டியில் சாட்சி 2 ஆறுமுகம் மற்றும் 3 சசிகலா ஆகியோர்கள் வந்து விலக்கி விட்டு எனது மகன் சரவணனை தொடர்பு கொண்டு சம்பவம் குறித்து தெரிவித்தார்கள். எனது மகன் வந்து என்னை அவரது இரு சக்கர வாகனத்தில் திருப்பத்துர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு 5 நாட்களாக நான் உள்நேயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் நான் போலிசாரிடம் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது

தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கல் மற்றும் கழை கொத்தியால் என்னை தாக்கவில்லை. என்னை தாக்கியது இதை விட பெரிய அளவுக்கொண்ட கல் மற்றும் கழை கொத்தி ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

எனக்கும் எதிரிகளுக்கும் நீண்ட நாட்களாக நில பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இது சம்மந்தமாக கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 12/2017 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ தேதியான 16.07.2017 அன்று நான் எதிரிகளை தாக்கியதாக அவர்கள் என் மீது புகார் அளித்து அதன் அடிப்படையில் குற்ற எண் 118/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், எனது மகனும் ஆஜராகாததால் எங்களுக்கு பிடியாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பொய் வழக்கு அதனால் நாங்கள் ஆஜராகவில்லை. எங்கள் கிராம நிர்வாக அலுவலகம் திரியாலத்தில் உள்ளது. சம்பவம் நடந்த 16.07.2017 க்கு இரண்டு நாட்களுக்கு முன்பே கிராம நிர்வாக அலுவலரிடம் இந்த பொய் புகாரை கொடுக்க வேண்டும் என்பதற்காக ஜாமீன் சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை தாக்கிய கல் மற்றும் கழை கொத்தி ஆகியவை சம்பவயிடத்திலேயே தான் இருந்தது. புகாரை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் போலிசார் கையொப்பம் செய்ய சொன்னதால் செய்தேன், விவரங்கள் அவரே எழுதிக்கொண்டார். மருத்துவரிடம் இரண்டு பெண் நபர்கள் என்னை தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, மூன்று நபர்கள் தாக்கியாகதாக தான் சொன்னேன். நான் மருத்துவமனையில் இருந்து அன்றே டிஸ்சார்ஜ் ஆகி விட்டேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கு சுமார் 76 வயது இருக்கும். எனது தம்பி மூர்த்திக்கு சொந்தமான இடத்தை நான் அபகரிக்க வேண்டும் என்பதால் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.C.C.NO.108/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தசாமி | தொழில் | ஆசிரியர் |
| கிராமம் | ஜோலர்பேட்டை | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 12 day of December 2022.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 ஞானலட்சுமி எனது அக்கா ஆவார். கடந்த 16.07.2017 அன்று மதியம் 12.00 மணியளவில் புல்லானேரியில் உள்ள எங்களது நிலத்தின் அருகே ஒரே கூட்டமாக இருந்தது. அங்கு எனது தம்பி மனைவி திலகவதிக்கும், அ–சா.1 னிற்கும் சண்டை நடந்ததாக தெரிந்துக்கொண்டேன். நான் செல்வதற்குள் சண்டை முடிந்து இருந்தது. நான் அங்கிருந்தவர்களை பேசி கொள்ளலாம் என்று கூறி சாமாதான படுத்தி அனுப்பினேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

சம்பவத்தின் போது அ.சா.1 னிற்கு காயம் ஏற்பட்டதா என்று நான் கவணிக்கவில்லை. சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரம் கழித்து தான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் அ.சா.1 ன் மகன் சரவணனுக்கு சம்பவம் குறித்து போன் மூலம் தகவல் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 ஐ கல்லாலும், மரக்கொம்பாலும் தாக்கியதை நேரடியாக பார்த்து விட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

இல்லை

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness